

## வரலாற்றில்

# பிரம்மதேசம்

திருவண்ணாமலை மாவட்ட
வரலாற்று ஆய்வு நடுவம்

# உள்ளடக்கம்


1. அமைவிடம்
2. மக்கள் தொகை
3. பெயர்க் காரணம்
4. தொழில் / விவசாயம்
5. ஊராட்சி அமைப்புகள் / பள்ளிகள்
6. கோயில்கள்
7. திருவிழாக்கள்
8. வரலாறு
9. கல்வெட்டுகள்
10. நடுகற்கள் / நினைவுச்சின்னங்கள்
11. கோயில் அமைப்பு
12. முடிவுரை






# முன்னுரை

பிரம்மதேசம் – வரலாற்று ஆய்வாளர்களின் களம். பல அரிய வரலாற்றுத் தகவல்கள் கொண்ட பெட்டகம். 1000 ஆண்டுகளுக்கு முன் சீர்பெற்று விளங்கிய இடம். சோழர்களின் கல்வெட்டு புதையல். இன்று சிறிய கிராமமாக உள்ள பிரம்மதேசத்தில் பல்லவர் காலத்து சந்திரமௌலீஸ்வரர் என்ற திருப்போந்தை ஆழ்வார் கோயில், சோழர் கால உருத்திர கோட்டீஸ்வரர் கோயில், கைலாசநாதர் கோயில், ஆதித்த க்ருஹம் என்ற சூரிய கோயில் உள்ளிட்ட பல கோயில்கள் கொண்டு சிறந்து விளங்குகிறது. தொடர்ந்து ஆய்வாளர்களால் பல்வேறு தகவல்களுக்காக மேற்கோள் காட்டப்படும் கோயில் கல்வெட்டுகள். வரலாற்றிற்கும் தொல்லியலுக்கும் வளம் சேர்க்கும் பிரம்ம தேசம் பற்றிய ஒரு சிறுஅறிமுக நூலாக திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகிறது.

.

**ச. பாலமுருகன்**
செயலாளர்
திருவண்ணாமலை மாவட்ட
வரலாற்று ஆய்வு நடுவம்.



# வரலாற்றில் பிரம்மதேசம்

## 1. அமைவிடம்

திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் வட்டத்தில் பாலாற்றுக் கருகில் அமைந்துள்ளது பிரம்மதேசம். இவ்வூரை சென்றடைய, காஞ்சிபுரம் – அய்யங்கார்குளம் வழியாக சக்கரமல்லூர் செல்லும் சாலையில் வந்தடை யலாம். அல்லது சென்னை – வேலூர் சாலையில் ஓச்சேரிக்கு தெற்காக செல் லும் சாலை வழியாக பாலாற்றைத்தாண்டி வந்தடையலாம். பேருந்து மற்றும் சாலைவசதி போதுமானதாக அமைந்துள்ளது. ஆற்காட்டிலிருந்து மோரணம் வழியாக நாட்டேரி வந்தும் பிரம்மதேசம் அடையலாம்.

## 2. மக்கள் தொகை

பிரம்மதேசம் கிராமத்தின் மொத்த பரப்பளவு 718.56 ஹெக்டர் ஆகும். மொத்த மக்கள் தொகை 5747, ஆண்கள்– 2865, பெண்கள் 2882, பட்டியல் வகுப்பினர் 1216. இவ்வூரில் ஆதிராவிடர், வன்னியர், முதலியார், யாதவர், குயவர், வேட்டைக்காரர், விஸ்வகர்மா, முஸ்லிம், இருளர் இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

## 3. பெயர்க் காரணம்

பிரம்மதேசம் என்ற பெயர் உள்ள ஊர்கள் பொதுவாக அரசர்களால் அந்த ணர்களுக்கு கொடையாக அளித்த ஊராகும். தமிழ்நாட்டில் பல்லவர்காலம் முதல் வேதம் ஓதவல்ல பிராமணர்களுக்கு நிலக்கொடை (பிரம்மதேயம்) வழங்கும் மரபு இருந்தது. அது போன்ற ஒரு நேர்வில் வழங்கப்பட்ட ஊராக இந்த பிரம்மதேசம் அமைந்துள்ளது. அதுவே இன்று வரை ஊரின் பெயரா கவும் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் இராஜமல்ல சதுர் வேதிமங்கலம் இராஜராஜனின் 27 ஆம் ஆட்சி ஆண்டு முதல் (கி.பி.1012) முதல் தாமர்நாட்டு கரைக்கோட்டு பிரம்மதேசம், பின்னர் பராக்கிரம சோழ சதுர்வேதிமங்கலம், தினசிந்தாமணி சதுர்வேதிமங்கலம் என்ற பெயர்களும் வழங்கப்பட்டதை கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

## 4. தொழில் / விவசாயம்

இவ்வூரின் முக்கியத் தொழில் விவசாயம். நெல், கரும்பு போன்ற பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. இவ்வூர் விவசாயத்திற்கு முக்கிய ஆதாரமாக பாலாறும், ஊரில் உள்ள ஏரிகளும் அமைந்துள்ளன. இவ்வூரில் 2 ஏரிகள் அமைந்துள்ளன.

## 5. ஊராட்சி அமைப்புகள் / பள்ளிகள்

இவ்வூரில் கிளை தபால் அலுவலகம் (அஞ்சல் குறியீடு 632511) காவல் நிலையமும், ஓர் ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி, இரண்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளி ஆகியன உள்ளன.

## போக்குவரத்து

பிரம்மதேசம் மாநில நெடுஞ்சாலையில் (மாநில நெடுஞ்சாலை—05) அமைந்துள்ளது. அருகில் ஆற்காடு வந்தவாசி, திண்டிவனம் மற்றும் காஞ்சி புரத்தை (செய்யார்) ஆகிய நகரங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளது.

## 6. கோயில்கள்

1. சந்திரமௌலீஸ்வரர் கோயில்
2. உருத்திர கோட்டீஸ்வரர் கோயில்.
3. செல்லியம்மன் உடனுறை கன்னிகேஸ்வரர் கோயில்
4. சங்கரநாராயணர் கோயில்
5. கைலாசநாதர் கோயில்
6. விநாயர்கள் கோயில், பெருமாள் கோயில், அம்மன் கோயில்கள்.

## 7. திருவிழாக்கள்

செல்லியம்மன் கோயில் மற்றும் கங்கையம்மன் கோயில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

## 8. வரலாறு

### வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

தமிழத்தின் முக்கிய ஆறாகவும் பழங்கால மக்கள் வாழ்ந்த தடயங்களைக் கொண்டதாகவும் விளங்குவது பாலாறு ஆகும். இவ்வூரும் பாலாற்றின் தென் கரையில் அமைந்துள்ள சிற்றூர் ஆகும். இப்பாலாற்றின் கரையில் அமைந் துள்ள மற்றொரு ஊரான பில்லாந்தாங்கல் ஊரில் பழங்கற்காலத்தைச் சேர்ந்த நுண்கருவிள், கோடரி, கத்திகள் போன்ற பொருட்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றை நோக்கும் போது இவ்வூரும் பழங்காலந்தொட்டே மக்கள் வசித்து வரும் ஊராக இருக்கலாம். மேலும் இவ்வூர் கல்வெட்டுகளில் இவ்வூர் முக்கிய வழித்தடத்தில் இருப்பதாக குறிப்பிடுவதால் இங்கு மக்கள் போக்குவரத்து வணிகம், விவசாயம் சிறந்த ஊராக பண்டைய காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

### வரலாற்றுக் காலம்

வரலாற்றுக் கால தொடக்க காலமான சங்க காலத்தில் இவ்வூர் தொண்டை மண்டலத்தில் ஒரு பகுதியில் அமைந்திருந்தது. காஞ்சிபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த தொண்டைமான் பகுதியாக லாம். இவ்வூர் அருகே உள்ள பில்லாந்தாங்கல் மற்றும் பாலாற்றின் படுக்கை தொன்மையான தொல்லியல் எச்சங்களைக் கொண்ட பகுதியாகும். இவ்வூர் 9 ஆம் நூற்றாண்டு முதல் 17 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து முக்கிய வழி பாட்டு இடமான அமைந்துள்ளது. இங்குள்ள இரண்டு பண்டைய கோயில்

களில் உள்ள கல்வெட்டுகள் இவ்வூரின் வரலாற்றை மிக அழகாக விளக்கு கின்றன.

## 9. கோயில் அமைப்பு

பிரம்மதேசம் சந்திரமௌலீஸ்வரர் கோயில் சுமார் 2 ஏக்கர் பரப்பில் ஊரின் கிழக்குப் பகுதியில் பனைமரங்கள் சூழ இயற்கை எழிலுடன் அமைந்துள்ளது. இக்கோயில் முழுவதுமாக இந்திய தொல்லியல் துறையினரால் சீரமைக்கப் பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இக்கோயில் வடபுறத்தில் சிறிய விமா னமும் அதைத் தொடர்ந்து கோயிலும் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய இக்கோயில் 3 தள விமானத்துடன் அமைந்துள்ளது. இக்கோயில் மேலை கங்கர்களின் கட்டடக் கலையை ஒத்துள்ளது. பாதபந்த அதிட்டானத்துடன், பாதவர்க்ம், யாளிவரி, மகரதோரணங்கள், நான்குபுறம் சாலைகளும், விமா னத்தின் நான்கு புறங்களில் சிற்பங்கள் அமைந்துள்ளன. கருவறை, அந்த ராளம், அர்த்த மண்டபம், முகமண்டபத்துடன் அமைந்துள்ளது. நந்தி அர்த்த மண்டபத்தில் அமைந்துள்ளது. கருவறையில் லிங்கமும் அதன் தென்மேற்கு மூலையில் மற்றொரு லிங்கமும் அமைந்துள்ளது. கோயிலைச்சுற்றி சுற்றுச் சுவர் அமைந்துள்ளது. கோயில் விமானம் மணற் கற்களால் அமைக்கப்பட் டுள்ளது. கோயிலின் மூன்று பக்கமும் நிறைய கல்வெட்டுகள் அமைந்துள் ளன. எளிய தோற்றத்துடன் மிக்க அழகுடன் அமைந்த கோயில் இதுவாகும். இக்கோயிலில் வழிபாடு ஏதும் இல்லை.

பாலாற்றின் கரையில் அமைந்துள்ள ருத்திர கோட்டிஸ்வரர் ஆலயம் பாழ டைந்து உள்ளது. ஆனால் வழிபாடு நடைபெற்று வருகிறது. இக்கோயிலிலும் முக்கிய கல்வெட்டுகள் உள்ளன.

## 10. கல்வெட்டுகள்

இவ்வூரில் இந்திய தொல்லியல் துறை 1915 இல் 85 கல்வெட்டுகளும், 1977–78 இல் 7 கல்வெட்டுகளும் 1982 இல் 6 கல்வெட்டுகளும் ஆவணம் இதழில் 1 ஒரு கல்வெட்டும் என மொத்தம் 99 கல்வெட்டுகள் உள்ளன. அண் மையில் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம் அதே ஊரில் உள்ள பாழடைந்த கைலாசநாதர் கோயிலில் 7 கல்வெட்டுகளை பதிவு செய் தது. அத்துடன் அவ்வூரில் 106 கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் கல்யாண வரதர் கோயிலில் ஒன்றும், செல்லியம்மன் கோயிலில் ஒன்றும், சந்திரமௌ லீஸ்வரர் கோயிலில் வெளிப் புறத்தில் ஒன்றும், உருத்திர கோட்டீஸ்வரர் கோயிலில் நான்கும் பாழடைந்த கைலாச நாதர் கோயிலில் 7 கல்வெட்டு களும் மற்றவை சந்திரமௌலீஸ்வரர் கோயிலிலும் உள்ளன. இக்கல்வெட்டு களில் காலத்தால் முந்தையது பல்லவர் காலத்து கல்வெட்டு ஆகும். கம்ப வர்மன் காலத்தில் (பொ.ஆ.866) கல்வெட்டே இவ்வூரில் கிடைக்கப் பெறும் பழைய கல்வெட்டு ஆகும்.

## அரசர்கள்

பிரம்மதேசம் கோயில் கல்வெட்டுகள் கீழ்காணும் அரசர்களின் காலத்தைச் சேர்ந்தவை.

| வ.எண் | அரசர் பெயர் | ஆட்சியாண்டு ஆண்டு | கல்வெட்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கம்பவர்மன் | 850-882 | 1 |
| 2 | ஆதித்தியன் | 871-907 | 2 |
| 3 | முதலாம் பராந்தகன் | 907-950 | 18 |
| 4 | கன்னரதேவன் | 939-967 | 1 |
| 5 | சுந்தரசோழன் | 957-970 | 1 |
| 6 | பார்த்திவேந்திராதிவர்மன் | 970-985 (?) | 11 |
| 7 | முதலாம் ராஜராஜன் | 985-1014 | 12 |
| 8 | முதலாம் இராஜேந்திரன் | 1014-1044 | 15 |
| 9 | முதலாம் இராஜாதிராஜன் | 1044-1054 | 6 |
| 10 | இரண்டாம் ராஜேந்திரன் | 1054-1063 | 6 |
| 11 | விக்ரமசோழன் | 1063-1070 | 3 |
| 12 | முதலாம் குலோத்துங்கன் | 1070-1120 | 3 |
| 13 | இரண்டாம்குலோத்துங்கன் | 1133-1150 | 1 |
| 14 | மூன்றாம் குலோத்துங்கன் | 1178-1218 | 2 |
| 15 | மூன்றாம் இராஜேந்திரன் | 1246-1279 | 1 |
| 16 | வீரகம்பண்ணன் | 1364 | 1 |
| 17 | காலம் குறிப்பிடாத சோழர் கால கல்வெட்டுகள் | | 15 |
| | மொத்தம் | | **106** |

இவற்றில் வீர கம்பண உடையாரின் கல்வெட்டே காலத்தால் பிந்தையதாகும்.

## ஆட்சிப் பகுதி

தொண்டை மண்டலத்தில் அமைந்துள்ள பிரம்மதேசம் கல்வெட்டுகளில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து தாமர் கோட்டத்து தாமர் நாட்டு கரைக் கோட்ட பிரம்மதேயம் என்று குறிப்பிடுகிறது. இதில் ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்பது சோழர் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சிப் பிரிவாகும். தாமர் கோட்டம் என்பது தொண்டை மண்டலத்தின் **24** கோட்டங்களுள் ஒன்றாகும். (தாமர் என்பது தற்போது தாமல் என்ற பெயராலே வழங்கப்படுகிறது) தாமர் நாடு என்பது தாமர் கோட்டத்தில் உள்ள பல நாடுகளில் இதுவும் ஒன்றாகும். ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்ற ஆட்சிப் பிரிவு **11–**ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளிலிருந்து குறிக்கப்படுகிறது. அதற்கு முந்தைய








2018.11.05 13:11

கல்வெட்டுகளில் தாமர் கோட்டம் மட்டுமே குறிக்கப்படுகிறது. மேலும் இவ்வகைபாட்டில் பற்று என்ற வருவாய்ப் பிரிவு இவ்வூர் கல்வெட்டுகளில் அதிகம் இடம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கோட்டங்கள்

பிரம்மதேசம் தாமர் கோட்டத்தில் உள்ள ஒரு பிரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வூர் கோயிலுக்கு அளித்த கொடைகளைப் பற்றி கூறும் கல்வெட்டுகளில் பல்வேறு கோட்டங்களில் இருந்து கொடைகள் வரப்பெற்றுள்ளன. குறிப்பாக படுவூர் கோட்டம், புலியூர் கோட்டம், சோழநாட்டு கிழார் கூற்றம், ஊற்றுக்காடு கோட்டம், வெண்குன்றக் கோட்டம், புறழ்கோட்டம், செங்காட்டுக் கோட்டம், காலியூர் கோட்டம் போன்றவாகும். இதுபோல நாட்டுப் பிரிவுகளில் இன்னம்பர் நாடு, சக்ரப்பாடி, நீர்வேளூர் நாடு, மழநாடு, இங்கநாடு, உம்பர்நாடு, புலியூர்நாடு, பெரும்பாணப்பாடி நாடு, படுவூர்நாடு போன்றவையும் ஊர் என்ற பிரிவில் சங்கரப்பாடி, மாங்காடு, விதியூர், நெல்வேலி, வள்ளிவயம், இலங்காடு, தும்பூர், திரைராஜ்யகடிகா, தில்லைச்சேரி, அறியூர், மும்முடிசோழபுரம், பறியலூர், குண்டூர், ஆற்றூர், மயிலாப்பூர், காந்தபுறபேட்டை போன்றன இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கும் கோட்டங்கள் காவிரி வடகரையிலிருந்து தொண்டை மண்டலத்தின் வடஎல்லை வரை நீண்ட பகுதிக்குள் அமைந்துள்ளன. இக்கோயில் மிகவும் புகழ்பெற்றிருந்தது என்பதாலேயே இவ்வளவு பெரும் பரப்பிலிருந்து பல்வேறு சமூகப் பிரிவிலிருந்து கொடைகள் பெற்றுத் திகழ்ந்தது.

## இறைவன் பெயர்

இக்கோயில் கல்வெட்டில் இறைவனது பெயர் போந்தை நாதர், போந்தை ஆண்டார், போந்தை ஆழ்வார் என்றெல்லாம் குறிக்கப்படுகிறது. போந்தை என்பது இளம் பனை என்று அறியப்படுகிறது. பனை மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மரபு இப்பகுதியில் உள்ளது. சான்றாக திருப்பனங்காட்டில் பனை மரம் தலமரமாகவும், பனை மரத்தை வெட்டினால் தண்டனை உண்டு என்ற கல்வெட்டும், செய்யாறு வேதபுரிஸ்வரர் கோயிலிலும் பனை மரமே தல மரமாக உள்ளது. இங்கு ஆண் பனையை பெண்பனையாக மாற்ற திருஞான சம்பந்தர் பாடிய பதிகம் அனைவரும் அறிந்ததே. மேலும் வெம்பாக்கம் அருகில் உள்ள திருப்பனமூர் என்ற ஊரும் பனை மரம் தொடர்புடையதாகும். பிரம்மதேசத்திலும் இக்கோயில் அமைந்துள்ள இடம் சுற்றிலும் பனைமரங்கள் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. எதன் காரணமாக இக்கோயிலுக்கு சந்திரமௌலீஸ்வரர் என தற்காலத்தில் பெயரிடப்பட்டது என்று தெரியவில்லை சந்திரமௌலீஸ்வரர் என்ற பெயர் கல்வெட்டில் எங்கும் காணப்படவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

## கல்வெட்டில் ஊர்ச் சபைகள்

சோழர் கால ஆட்சியின் முக்கியச் சிறப்பாக கருதப்படுவது ஊர் சபைகள் அல்லது குழுக்களின் உருவாக்கமும் அதன் செயல்பாடும் ஆகும். சங்க காலத்தில் இனக்குழுவாக இருந்த மனித சமூகம் வேளாண்மை, நெசவு, சிற்பக்கலை, ஓவியக்கலை உள்ளிட்ட துறைகள் வளர்ச்சியடைந்து வந்துள் ளது. சோழர் காலத்தில் உச்சநிலையை அடந்த இக்கலைகளுடன் ஊர் உரு வாக்கம், கோயில்கள், தெருக்கள், ஏரிகள், மடங்கள், அன்ன சத்திரங்கள், பாசன வசதி, நில அளவீடுகள் போன்ற மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள் உருவாகி நிலைபெற்றன. ஊரில் உருவான சமூதாய சொத்துக்களை பரா மரிக்கவும், கோயிலில் தொடர்ந்து பூசைகள், வழிபாடுகள் நடைபெறவும், ஊர் அளவிலான குழுக்களும் சபைகளும் தோன்றி துறைவாரியான பணிகளை மேற்கொண்ட தகவல்கள் கல்வெட்டுகளில் காணலாம்.

பிரம்மதேசம் என்ற ஊர் தற்போது சிறிய ஊராட்சியாக உள்ளது. ஆனால் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அப்பகுதியின் நிர்வாகம் செய்யக் கூடிய அலகாக அமைந்திருந்தது. இவ்வூரில் பல்வேறு குழுக்களும் வாரியங் களும் செயல்பட்ட விவரங்கள் கல்வெட்டில் காணக்கிடைக்கின்றன. பொது வாக ஊரில் உள்ள சபை ஊரின் செல்வந்தர்களால் அல்லது பிராமணர்களால் அமையப் பெற்றிருக்கும். இச்சபையின் கீழ் பல வாரியங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

பிரம்மதேசம் கல்வெட்டில் அஞ்சஷ்டசதத்து சபை, பெருங்குறி மகாசபை என்ற அமைப்பு முக்கியத்துவம் பெற்ற ஒரு சபையாக குறிக்கப்பட்டுள்ளது. இச்சபை ஊரில் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளையும் கண் காணித்து அவ்வப்போது ஆணைகள் பிறப்பித்து செயல்பட்டுள்ளது. இச்சபை புளியமரத்தின் கீழ், பெருமண்டபத்தில், போந்தை பெருமான் கோயிலில் திருவாய்ப்பாடி தேவர் கோயிலில் போன்ற இடங்களில் கூடி முடிவெடுத்தது பற்றியும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சபையின் கீழ் அல்லது இதுபோன்ற பிற சபைகளான கம்மாளர்சபை, ஆளுங்காணத்து குழு, கணவாரியப் பெருமக்கள், ஏரிவாரியப் பெருமக்கள், ஸ்ரீகாரியம் சபை, ஸ்ம்வஸ்தர வாரியம், கிராமந்தர் என்ற நீர்ப்பாசனப் பிரிவு, இவற்றுடன் அஞ்சஷ்டசதத்து சபை என்கிற நாலாயிரவர் சபை போன்றவை கல்வெட்டு களில் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு கோட்டங்களிலிருந்து வரும் கொடைகளை பெற்று அதைச் வாரியங்கள் மூலமாக செயல்படுத்தும் பணியைச் இச்சபைகள் செய்தன. இச்சபைகள் ஊரின் முக்கிய முடிவுகள் எடுக்கும் அமைப்பாகவும் நிர்வாக அலகாகவும் செயல்பட்டது பற்றிம் அறிய லாம். கச்சி ஏகம்பத்து திருவுண்ணாழிகை சபை பற்றிய குறிப்பும் உள்ளது. இக்குழுக்களின் உறுப்பினர் தேர்வுகள் தொடர்பான தகவல்கள் இவ்வூர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படவில்லை.

## நீர் நிலைகள்

மக்கள் வாழ்க்கையில் உயிர் நாடியாக திகழ்வது நீர், இந்நீரை சேமிக்கவும் பயன்படுத்தவும் ஆதிகாலத்தில் இருந்தே பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டுள்ளனர். ஆதிகால மக்கள் நீர் இருக்கும் இடமான ஆற்றங் கரையிலே தங்களது குடும்பங்களை அமைத்து வாழ்ந்து வந்தனர். பின்னர் வேளாண்மை பெருகிய போது ஆற்றில் இருந்து நீரை தொலை தூரத்திற்கு கொண்டு செல்ல வாய்க்கால்களையும் அந்நீரை சேமிக்க ஏரிகளையும் வெட்டினர். தொண்டை மண்டலப் பகுதியில் பாலாறு, தென்பெண்ணையாறு, செய்யாறு ஆகிய ஆறுகள் இருந்தாலும் அவற்றில் ஆண்டு முழுக்க நீர் இருக் காது என்பதாலும் மழை குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே பெய்யும் என்பதாலும் நீரை சேமிக்க ஏரி, குளம் உள்ளிட்ட பல்வேறு நீர்நிலைகளை தமிழர்கள் அமைத்தனர். அதில் முக்கியமான பாசன ஆதாரமாக விளங்குவது ஏரி. சோழர்காலத்தில் தமிழகத்தில் பல்வேறு ஏரிகள் உருவாக்கம் பெற்றது பற்றி பல கல்வெட்டுகளில் காணலாம்.

பிரம்மதேசம் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள ஊர் என்பதால் அவ்வாற் றிலிருந்து நீர் கொண்டு வந்த சேர்க்க போதிய நீர் ஆதாரங்களை அமைக்க தேவையேற்பட்டதின் விளைவாக அவ்வூரில் பல ஏரிகள் வெட்டுவித்து பயன் படுத்தப்பட்ட தகவல்கள் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். இவ்வூரில் திகைத்திறல் ஏரி, பனையுடைநல்லூர் ஏரி, குந்தவை பேரேரி, வீரமாதேவி பேரேரி, இராசேந்திரசோழப் பேரேரி, சுந்தரசோழப் பேரேரி, தூரேரி, கடப்பேரி, சம்புவராயர் பேராறு, மதுராந்தகப் பேரேரி என்ற ஏரிகள் பற்றிய குறிப்புகளும் பரமேஸ்வர வாய்க்கால், ராமவாய்க்கால், சோழபாண்டிய வாய்க்கல் போன்ற வாய்க்கால்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சோழபாண்டிய பேராறு, திருவெக் காஆறு, வேகவதி ஆறு போன்ற ஆறுகளின் பெயர்களின் இக்கல்வெட்டு களில் காணலாம். நீர்பகிர்வு மேலாண்மை சிறப்பாக செயல்பட்டது பற்றி தெரிந்து கொள்ள ஏரிகளிலிருந்து வரும் தண்ணீர் கண்ணாற்று வாய்கால் முதல் வதி, இரண்டாம் வதி என்ற வழியே தண்ணீர் அனுப்பி மீண்டும் வதி என்று குறிப்பிடப்படும் சிறு வாய்க்கால் மூலம் தண்ணீர் நிலங்களுக்குப் பாய்ச்சப்படுகிறது என்பதை அறியலாம். ஏரிகளில் தேவியர் தூம்பு, பெரிய தூம்பு போன்றவையும், மடை, தீர்த்தகுளம், ஏரிநீர்கோவை போன்ற நிர்நிலை களைப் பற்றியும் குறிப்புகள் உள்ளன.

## விழாக்கள் / சந்நிதிகள்

கோயில் உள்ள ஊர்களில் திருவிழாவிற்கு பஞ்சம் இருக்காது. பிரம்ம தேசத்தில் பல்வேறு கோயில் இருந்ததைப் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட் டுள்ளது. இக்கோயில்களில் பெருவீற்றை நாள்விழா, திருவோணம், ஐப்பசித் திருநாள் போன்ற விழாக்கள் நடைபெற்றது பற்றி கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்வூர் கோயிலில் வழிபாட்டிற்கு பயன்படுத்திய படையல்

பற்றியக்குறிப்புகளும் காணப்படுகின்றன. அவை, இலைக்கறி, நெய், தயிர், பாக்கு, வெற்றிலை, மோர், மிளகுகறி, புளிக்கறி, சர்க்கரை ஆகியனவாகும்.

இக்கோயிலிலும் இவ்வூரிலும் சிறப்பு பெற்ற வேறு பல கோவில்களும் இருந்துள்ளன. திருப்போந்தை பெருமான் கோயிலில் தச்சணாமூர்த்திக்கு ஒரு சந்திதியும், ரிஷபவாகன தேவர் சிலையும், ஆடவள்ளான் சிலையும், ஸ்ரீபாசுபத மூர்த்தி சிலையும் இருந்துள்ளன. இவை தவிர ஊரில் திருச்சிற்றம் பலமுடையார் கோயில், அயோத்தி ஆழ்வார் கோயில், சப்தமாதர் கோயில், சுப்பிரமணியர் கோயில் என பல கோயில்கள் இருந்ததும் தெரியவருகிறது.

## ஊரமைப்பு

ஊரில் கோயில்களும் சாலைகளும், தெருக்களும் பொது இடங்களும் இருந்തதைப்பற்றி கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரம்மதேசத்தில் ஆறாங்கட்டளைத் திருவீதி, பெருந்தெரு என்று தெருக்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆறாங்ககட்டளைத் திருவீதி என்று குறிக்கப்பட்டிருப்பதால் இவ்வூரில் இதேபோன்று ஆறு தெருக்கள் இருந்தன என்பதை அறியலாம். மேலும் இவ்வூரில் தெண்ணாயிரவர் மடம், பவித்ரமாணிக்க மடம், ஜனநாதன் மண்டபம் ஆகியன அமைந்திருந்தமைப் பற்றியும் கல்வெட்டுகளின் மூலம் அறியலாம். தீர்த்தக்குளம் அமைத்து வழிப்போக்கர்களுக்கு தண்ணீர் அமைத்ததும் அறியலாம்.

## அளவைகள்

தமிழர்களின் எண்ணியல் அறிவு பற்றிய அறிய சோழர்காலத்து கல்வெட்டுகள் மிக்க பயனுடையதாக உள்ளன. தமிழ் எண்ணியலில் மேலிலக்க எண்கள், கீழிலக்க எண்கள் என இரு பெரும் பிரிவாக பிரித்து கீழிலக்க எண்களில் மீச்சிறு அளவைகளாப் பிரித்து பயன்படுத்திய விதம் வியப்புக்குரிய தாகும். ஒரலகை 320 (முந்திரி) ஆக பிரித்து வகைப்படுத்தும் அறிவு கல்வெட்டுகளில் காணக்கிடைகின்றன. பிரம்மதேசம் கல்வெட்டுகளில் நிலங்களை குழி, மா, வேலி என்ற அளவாலும், பொன்னை கழிஞ்சு, மஞ்சாடி, துறைநிறை பொன் என்ற அளவிலும் முகத்தில் அளவையை மரக்கால் என்ற அளவாலும், நெல்லை காடி என்ற அளவாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. தண்மக்கட்டளை என்ற நிறுத்தல் அளவை, தூனி, உழக்கு, ஆழாக்கு, செவிடறை, மஞ்சாடி, செவிடு, குண்டில், தடி, கோல் என்ற அளவைகளும் இவ்வூர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதை அறியலாம். இப்பகுதியில் பயன்படுத்திய மரக்கால் சீரிபோழ்ந்தம் மரக்கால், அருண்மொழி தேவன் மரக்கால் என்ற பெயரால் குறிப்பிடப்படுகிறது. நிலங்களை 16 சாண்கோல் என்ற அளவுகோலால் அளக்கப்பட்டது என்பதும் கல்வெட்டுகளில் மூலம் தெரிய வருகிறது.

## எண்ணுப் பெயர்ச்சொல்

இவ்வூரில் உள்ள ஒரு சபையின் பெயர் அஞ்சஷ்டசதத்து சபை என்ற (5 X 8 X 100) என்ற நாலாயிரவர் சபை என்ற பெயரும் கல்வெட்டி வெட்ட அனுமதி பெற்று செயல்படுத்திய ஊர் கணக்கன் மத்தியஸ்தன் என்ற பெயரில் திரை ராஜ்ய கடிகா மூவாயிரவன், நாதகான போசன் ஏழாயிரவன், திருவேகம்ப கற்பிச்சனேன், கேசவ பட்டன், ஸ்ரீபோந்தை ஏகாம்பரன், மூவாயிரத்து அறு நூற்றுவன், திருச்சிற்றம்பலப் பொற்கோன் போன்ற பெயர்கள் கல்வெட்டு களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் வணிகக்குழுப் பெயராக அல்லது பட்டப்பெயராக இருக்கலாம்.

## பெருவழிகள்

இக்காலத்தைப் போன்று அக்காலத்திலும் சாலைப்போக்குவரத்து நன் முறையில் செயல்பட்டுள்ளது. தற்போது பிரம்மதேசம் அமைந்துள்ள இப்பகுதி ஒரு பெருவழியாக இருந்துள்ளது. தென்தமிழகப் பகுதியில் இருந்து திருப்பதி செல்லும் வழியில் பிரம்மதேசம் அமைந்துள்ளது. இதைப்பற்றி இவ்வூர் கல் வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பதிக்கு (திருமலை) கூட்டமாகச் செல் லும் 100 பக்தர்களுக்காக இவ்வூரில் ஜெனநாத மண்டபத்தில் உணவளிக் கவும், தங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்ட செய்தி குறிப்பிடப்பட்டுள் ளது. இவ்வூரின் எல்லையாக ராஜமல்லப் பெருவழி என்ற வழியும் குறிப்பிடப் பட்டுள்ளது. இது காஞ்சிபுரம் செல்லும் சாலையாக இருக்கலாம்.

## வரிகள்

இக்கோயில் கல்வெட்டுகளில் ஒரு கல்வெட்டைத் தவிர மற்றவை சோழர் காலக் கல்வெட்டுகளும் ஒரு பல்லவர் கல்வெட்டும் ஆகும். இக்கல்வெட்டு களில் தானம் பற்றிய தகவல்கள் தான் அதிகமாக உள்ளன. வரி செலுத்த வேண்டியது பற்றிய விவரங்கள் இல்லை. மேலும் இக்கோயிலில் காணப்படும் விஜயநகர பேரரசு கால கல்வெட்டான கம்பண்ண உடையார் கல்வெட்டு (பொ.ஆ. 1363) ஆய்குடி மக்கள் மீது ஆயம், உள்ளாயம், உள்ளிட்ட பல வரிகள் விதிக்கப்பட்டது தெரியவருகிறது. பொதுவாக தொண்டை மண்டலத்தில் காணப்படும் கல்வெட்டுகளில் சோழர்கள் காலத்தில் வரிகள் குறைவாகவும் பிற்காலத்தில் வந்த விஜயநகர மற்றும் நாயக்கர் காலத்தில் மிக அதிகமாக வரிகள் விதிக்கப்பட்டதையும் இங்கு நோக்கத்தக்கது.

## சமூக அமைப்பு

பிரம்மதேசம் என்ற ஊர் அந்தணர்களுக்கு தானமாக அளிக்கப்பட்ட ஊர் என்பதால் இவ்வூரில் அந்தணப் பெருமக்கள் அதிகம் என்பதும் இவ்வூர் சமூக பிரிவுகளில் முக்கிய முடிவுகளை எடுக்கும் குழுக்களிலும் வாரியத் திலும் உறுப்பினர்களாக இருந்தார்கள் என அறியலாம். இவ்வூரில் வைண

வர்கள், வணிகர்கள், வேளாண்மை செய்யும் குடிகள், கோயில் தானங்களை யும் கொடைகளையும் கண்காணிக்கும காண்காணி போன்றவர்களைப் பற்றியும் இவ்வூர் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாழடைந்த கைலாசநாதர் கோயில் கல்வெட்டுகள்

பிரம்மதேசம் கிராமத்தில் மேற்கொண்ட கள ஆய்வின் போது, குளக்கரை அருகே உள்ள புதிய கைலாசநாதர் கோயில், பாழடைந்த கைலாசநாதர் கோயில் ஆகிய இடங்களில் புதியதாக பல கல்வெட்டுகளை கண்டறிந்து ஆவணம் இதழ்11, மற்றும் 26 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சில கல்வெட்டுகளை திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம் அண் மையில் பதிவு செய்தது. அதன் விவரம்.

### கல்வெட்டு எண் : 1


இடம் : கைலாசநாதர் கோயில்
அடித்தளம் – தெற்குப்பகுதி
காலம் : 10 ஆம் நூற்றாண்டு
அரசன் : பார்த்திவேந்திரன்.

குறிப்பு : ராஜமல்ல சதுரவேதிமங்கலத்தில் காடடையன் என்பவர் ஆதித்ய கிருகம் என்ற கோயலின் முக முண்டபம் மற்றும சோபானம் எடுத்து ஸ்ரீவிமா னம் புதுக்குவித்தமை.


1



2



3



**கல்வெட்டு பாடம் :**

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பார்த்திவேந்திர பன்மக்கி யா
2. ண்டு மூன்றாவது நாள் 150 இவ்விராஜமல்ல
3. சதுவேதிமங்கலத்து ஆதித்தகிருஹ
4. த்து முகமண்டபமும் ஸோபானமும் எ
5. டுத்து ஸ்ரீவிமானம் புதுக்குவீத்தான்
6. ஸ்ரீமய்ப்பெற்கடையார் மகன் காடடைய
7. ன் இத்தம்மம் ரக்ஷித்தார் ஸ்ரீபாதம் என்றலை
8. மேலின.

### கல்வெட்டு : 2

இடம் : கைலாசநாதர் கோயில் அடித்தளம்
– கிழக்குப்பகுதி
காலம் : 10 ஆம் நூற்றாண்டு
அரசன் :

குறிப்பு : கைலாசமுடையார் கோயிலுக்கு நிலக்கொடை கொடுத்தமை.

**கல்வெட்டு பாடம் :**

1. ராஜமல்ல பெருவதிக்கு மேற்கு பொ
2. ம் தென்பாற்கெல்லை தன் வாக்காலுக்கு
3. ற்பாற்கெல்லை ன்று நடுவு பட்ட 2கக எ2
4. குழி 2700 சின்னக்குழிக்கு கீழ்பாற்கெல்லை
5. டத்து ஸ்ரீகிராமவித்தன் பூமிக்கு கிழக்கும் வடபா
6. ற் பூமிகளுக்கு இதுவே பொருள் மாறுவதி
7. முற் சொல்லப்பட்ட ஸ்ரீகையிலாசமுடை ஆதி
8. அஞ்சாம விதி நரையூர் திருநிலக்கண்ட குட
9. கண்டத்து பூமி குழி அ மேற்படி யா நாதே

## கல்வெட்டு எண் : 3

கிராமம் : பிரம்மதேசம்

இடம் : கைலாசநாதர் கோயில் அடித்தளம் – தெற்குப்பகுதி

காலம் : 10 ஆம் நூற்றாண்டு, ஆட்சியாண்டு 25, பொ–ஆ. 932.

அரசன் : முதலாம் பராந்தகன்.

குறிப்பு : நாலாயிரவர் (அஞ்யஷ்டசதத்து) என்னும் சபையார் செய்த தீர்மானம். இதன்படி இராஜமல்ல சதுர்வேதி மங்கலத்தில் வேதம் ஓதுவாருக்குக் கொடுக்கும் (கிடைப்புறம்) நிலங்கள் உள்ளூர் சிராவண பாஹிகளுக்கு கொடுத்தல் கூடாது என தீர்மானம் இயற்றுகின்றனர். அவ்வாறு கிடைப்புறமும் பட்ட விருத்தியும் பெறுகின்றவர்கள் தண்டமிடப்பட வேண்டும் எனவும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. உத்தரமேரூர் கல்வெட்டுகளில் இக்கால கட்டத்தில் இது போன்ற தீர்மானங்கள் இயற்றி இருப்பதை காணமுடிகிறது.

**கல்வெட்டுப் பாடம் :**

1. மதிரை கொண்ட கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு
2. இருபத்தைஞ்சாவது இராஜமல்ல சதுர்வேதி மங்
3. கலத்து அஞ்யஷ்டசத்து சபையோம் எம்மில் இ
4. சைந்த வியவஸ்தையாவது எம்மூர் பட்ட விருத்தியும்
5. கிடைப்புறங்களும் உள்ளூர் ச்ராவண பாகிகளு
6. குக் குடுக்கப் பிறாதோமாநோம் பட்டவிருத்தியும்
7. கிடைப்புறங்களும் கணக்குச் செய்வாரும் தரவிட
8. ப்பி பிறாதாராநார் தரவிட்டாரையும் பட்டவிருத்தி
9. யும் கிடைப்புறமும் கொண்டாரையும் ச்ரத்தா
10. தைரேய் மாய நத்துநிரதி நூற்றெட்டுக் கா
11. ணம் தண்டமிட ஒட்டிக்குடுத்தோம் ஸைபையோம்
12. ஸபை பணிப்ப எழுதினேன் மத்யஸ்தன்.

## கல்வெட்டு எண் : 4

இடம் : கைலாசநாதர் கோயில் அடித்தளம் – தெற்குப்பகுதி

காலம் : 10 ஆம் நூற்றாண்டு


அரசன் :

குறிப்பு : நிலக்கொடை குறித்த தகவல், தொடர்ச்சியின்மையால் முழு விவரம் அறியப் பெறவில்லை.

**கல்வெட்டு பாடம் :**

1. ....ஸ்ரீ....ஸண்டேஸ்வர தேவற்கு விற்றுக்குடுக்கின்ற பூ(மி)
2. லியாக வைத்த பூமி ....சோழப்பேரேரி கீழ் ராஜமல்லப்பெருவதிக்கு
3. ம் இக்குழி கம்பின்படி....வுள்ளடங்கவும் விற்றுக்குடுத்தோம் நம்மூ
4. ....ண்ண இறையிலியாக ....மி ஈச்சம்பள்ளத்தேரி கீழ்மணறப்பாத
5. க்குழி கம்பின்படி மிதி .....ணடங்க விற்றுக்குடுத்தோம் விற்பக்குடுக்கின்ற பூமிக்
6. ....மாபூமிக்கு மேற்கும் .....கெல்லை.......தயா மூக வாக்காலுக்கு வடக்கும் மேல்
7. இன்னாபாற்கெல்லை ......டுவுபட்ட குழி 2070 குழியும் கம்பின்படி மிகிதிக்கு
8. .... க்கி ஸ்ரீமாயவடகம் .....பிமார பூமிக்கு மேற்கும் தென்பாற்
9. க்கெல்லை கண்ணாற்று தெற்கும் இன்னாற்பாற்கெல்லையுள்(ளா) நடுவுபட்ட

4



## கல்வெட்டு எண் : 5

இடம் : புதிய கைலாச நாதர் கோயில் பின்புறம் கோட்டம்

காலம் : 10 ஆம் நூற்றாண்டு

அரசு : சோழர்

அரசன் :

குறிப்பு : நிலதானம் குறித்த செய்தி, முழுமையடையவில்லை

**கல்வெட்டு பாடம் :**

1. ருத்தரலத்துத் திருபாசூர் பூமிக்கு மேற்கும் தென்பாற்கெல்லை எமத்து...
2. பிக்குக் கிழக்கும் தெற்கும் பந்நிர் தெற்கு நோக்கின நீர் பாதை வாய்க்காலு
3. தர் மோதிரந் உடையாந் விலையிட்டுக் கொண்டு விட்டமையில் இத்தேர்க்கு ஒரு

5



## கல்வெட்டு எண் : 6

இடம் : புதிய கைலாச நாதர் கோயில் தென்புறம் அதிட்டானப்பகுதி.

காலம் : 10 ஆம் நூற்றாண்டு

அரசு : சோழர்

அரசன் :

குறிப்பு :

**கல்வெட்டு பாடம் :**

1. ......
2. ...ஜயங்கொண்ட சோழமண்டலத்து தாமர் கோட்டத்து தாமற் நாட்டு பராக்கிரம சோழ சதுர்வேதி%.
3. .......இருந்து காஞ்சிபுரத்தில் திருவேகம்ப உடையார் தளியிலாள் நக்கன் தற்ப எம்பொருள் ஸ்ரீபலி எழுந்து...
4. கிழக்கு வதிமங்கலம் காந்திரயற்று
5. வைச்சு இத்தேவர் கோயில்.

## கல்வெட்டு எண் : 7

இடம் : பாழடைந்த கைலாச நாதர் கோயில் அதிட்டானப்பகுதி.

காலம் : 10 ஆம் நூற்றாண்டு

அரசு : சோழர்

அரசன் :

குறிப்பு : துண்டு கல்வெட்டு, தேவதானமாக கொடுத்தமை பற்றிய செய்தி.


**கல்வெட்டு பாடம் :**

1. ந்ணணாற்று தடி...
2. இறையிலியாக
3. நு ஆற்றூரர் ஸு...
4. கு வேங்கடப்
5. ச்சி போன்தை
6. திருநாயற்றுக்கிழமை
7. றவற்க கூடி இருந்து
8. வர் தேவதாநம
9. தேவதானங்கள் ...


6



7



8



## கல்வெட்டு எண் : 8

இடம் : பாழடைந்த கைலாச நாதர் கோயில் அதிட்டானப்பகுதி.

காலம் : 10–ஆம் நூற்றாண்டு

அரசு : சோழர்

அரசன் :

குறிப்பு : துண்டு கல்வெட்டு

**கல்வெட்டு பாடம் :**

1. ............டுத்
2. ............ இருபத்
3. .... ..... லத்துஅஇ
4. .........யளாவ
5. ......... டைபுற%
6. ........க்குகுடுக்கப்
7. ..........கிடைபுற
8. ......ப்பி......தாரா
9. ...... வும் கிடைபு
10. ......ளகரெய்......
11. ......ண்ப......ண்டம்
12. ......

9



10



## கல்வெட்டு எண் : 9

இடம் : பாழடைந்த கைலாசநாதர் கோயில் துண்டு கல்வெட்டுகள்.

காலம் : 10 ஆம் நூற்றாண்டு

அரசு : சோழர்

அரசன் :

குறிப்பு : ஆதித்ய கிருகம் என்ற கோயில் கற்றளியாக இருந்தது பற்றிய குறிப்பு.

**கல்வெட்டு பாடம் :**

1. திருவேகம் புறத்து இராஜமல்ல
2. இ கற்றளி ஆதித்த க்ரகத்து...

## கல்வெட்டு எண் : 10

இடம் : பாழடைந்த கைலாசநாதர் கோயில் துண்டு கல்வெட்டுகள்.

காலம் : 10 ஆம் நூற்றாண்டு

அரசு : சோழர்

அரசன் :

குறிப்பு : எழாயிரவன் என்பவன் கையெழுத்துப் பகுதி.

**கல்வெட்டு பாடம் :**

1... மஹா............. இத்தேவற்

2. ஏழாயிரவனேன் இவை என்னெழுத்து ....

## சிறப்பு கல்வெட்டுகள்

பிரம்மதேசம் கல்வெட்டில் அரசாட்சி, கிராமசபை, கோயில்நிர்வாகம், நிலதானங்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் தெரியவருகின்றன. இதில் சில கல்வெட்டுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்தனவாக உள்ளன. அவை.

## 1. விபரீத தண்டம்

பிரம்மதேசம் ஊரில் அமைந்துள்ள அஞ்சஷ்டசத்தது சபை ஏரி வாரியத்தின் கணக்கை எழுதும் கணக்கனுக்கு மதிப்பூதியம் வழங்க நிர்ணயித்துள்ளனர். மதிப்பூதியமாக தினமும் 3 நழி நெல்லும் வருடத்திற்கு 7 கழிஞ்சு பொன்னும் ஒரு சோடி ஆடையும் வழங்கிட தீர்மானித்துள்ளனர். அவர் கணக்குகளை சமர்ப்பிக்கும் போது தன்னுடைய நேர்மையை நிரூபிப்பதற்கு பழுத்தக் காய்ச்சிய இரும்பு கம்பியினை கையில் பிடிக்கவேண்டும் என்றும கையில் தீக்காயம் ஏற்படவில்லை என்றால் கூடுதலாக ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் இல்லையென்றால் 10 கழிஞ்சு பொன் தண்டமாக விதிக்கப்படும் என்றும் உடல் ரீதியான தண்டம் ஏதும் விதிக்கப்படாது என்ற விநோத வழக்கம் இருந்ததைக் காணலாம்.

## 2. ராஜேந்திர சோழன் பள்ளிப்படையா?

பிரம்மதேசம் சிவன் கோயில் பள்ளிப்படை கோயில் என்றே செய்திகள் பரப்பப்பட்டு அதையும் சில ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டதனால் இராஜேந்திரசோழன் தனது இறுதிக்காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்தார் என்றும் அவர் இறந்தது இங்குதான் என்றும் அவரது சமாதியே பள்ளிப்படை கோயிலாக எழுப்பட்டது என்ற கருத்துகள் பரவியுள்ளன. ஆனால் கல்வெட்டை நன்கு ஆய்ந்த ஆய்வாளர்கள் இக்கோயில் பள்ளிப்படை கோயில் அல்ல என்றும் இது வழக்கமாக அமைக்கப்பட்ட சிவன் கோயில் என்றும் தெரிவிக்கின்றனர். இதற்கு அவர்கள் ஆதாரமாக கொள்வது இக்கோயிலில் உள்ள

கம்பவர்மன் கல்வெட்டு ஆகும். இராஜேந்திரசோழனுக்கு முன்பாகவே சுமார் **150** ஆண்டுகளுக்கு முன்னர் எழுப்பப்பட்ட கோயில் எப்படி பள்ளிப்படை கோயிலாக இருக்கும் என்பது அவர்களது வாதம், மேலும் இக்கோயில் கல் வெட்டில் இராஜேந்திரசோழன் இறந்த பின்னர் உடன்கட்டை ஏறிய மன்னரின் தேவியார் வீரமகாதேவியார் இறப்பிற்காக தாகம் தீர்க்க வேண்டி தண்ணீர் பந்தல் அமைக்க இவரது உடன் பிறந்த சகோரர் மதுராந்தகன் என்னும் பரகேசரி வேளான் என்பவனுக்கு நிலம் விற்றுக் கொடுதுள்ளார். இதில் வீரமகாதேவியார் உடன்கட்டை ஏறிய தகவல் இருப்பதால் இங்குதான் இரா ஜேந்திரசோழன் இறந்தான் என்று நம்புகின்றனர். இது மேலும் ஆய்வு ஆய்வுக் குரியது.

## 3. ஆதித்ய க்ருஹம்

பிரம்மதேசம் கிராமத்தில் சந்திரமௌலீஸ்வரர், உருத்திர கோட்டீஸ்வரர் கோயிலைத் தவிர்த்து புராதனக் கோயிலாக ஆதித்த க்ருஹம் என்ற சூரிய னுக்கான ஒரு கோயில் ஒன்று மணற்கற்கலால் கட்டப்பட்டிருந்துள்ளது. என்ன காரணத்தாலே அந்த கோயில் காலப்போக்கில் பாழடைந்து அடையா ளமற்று போயுள்ளது. இந்த கோயில் சிதிலமடைந்த பகுதியில் கிடைக்கும் பார்த்திவேந்திர வர்மனின் கல்வெட்டு, ஆதித்ய க்ருஹம் என்ற கோயிலுக்கு முகமண்டபம் கட்டியது பற்றியும் சோபானம் என்ற படிக்கட்டு கட்டியது பற்றி யும் ஸ்ரீவிமானம் புதுப்பித்தது பற்றியும் குறிப்பிடுகிறது. மேலும் இதே பகுதி யில் உள்ள முதலாம் பராந்தகன் கல்வெட்டும், இன்னும் கிடைக்கும் பல துண்டு கல்வெட்டுகளும் ஆதித்ய க்ருஹம் என்ற குறிப்பை தருகிறது. பல நிலதானங்கள் அளித்த செய்தி, அஞ்யஷ்டசத்து சபை பற்றியும் பல குறிப் புகள் வருகின்றன. முக்கியமான இக்கோயில் பாழடைந்து போனதும் அதன் முழு கல்வெட்டுகள் கிடைக்காமல் போனதும் வரலாற்றுக்கு இழப்பேயாகும்.

## 4. கைலாசநாதர் கோயில்

ஆதித்த க்ருஹம் என்று கருதப்படுகின்ற கோயில் அருகே புதியதாக நிர் மாணித்து கட்டப்பட்டுள்ளது கைலாசநாதர் கோயில். இந்த கோயில் அதிட் டானப்பகுதியிலும், பின்புறத்தில் பல கல்வெட்டுகள் காணக்கிடைக்கின்றன. இந்த கல்வெட்டுகள் ஏதுவும் முழுமையின்றி உள்ளன. ஒரு கல்வெட்டு தாமர் கோட்டத்து பராகிரம சோழ சதுர்வேதி மங்கலம் என்ற பிரம்மதேசம் பற்றியும் காஞ்சிபுரம் திருவேகம்ப உடையார் கோயில் பற்றியும் குறிப்பிடுகிறது. இக்கல் வெட்டுகள் அனைத்தும் வண்ணம் பூசப்பட்டும் மறைத்தும் கட்டப்பட்டுள்ள தால் முழுவிவரம் அறியப்படவில்லை.

## 11. நடுகற்கள் / நினைவுச் சின்னங்கள்


இவ்வூரின் மையத்தில் நாயக்கர் கால நவகண்ட நடுகல் இரண்டும், மூத்த தேவி சிலை ஒன்றும் காணப்படுகிறது. இது இந்த ஊரின் சிறப்பான வரலாற்றுக்குத் தக்க சான்றாகும்.



தவ்வை



தலை பலி கல்



## ஊரைச் சுற்றி...

இவ்வூருக்கு அருகில் பழமையான சிவாலயங்களும், விஷ்ணு ஆலயங் களும் உள்ளன. அருகில் உள்ள திருப்பனமூர், குரங்கணில்முட்டம், திருப் பனங்காடு, செய்யாறு வேதபுரிஸ்வரர் கோயில், அழிபடைதாங்கி உள்ளிட்ட பல கோயில்கள் உள்ளன.

## 12. முடிவுரை

இந்தியத் தொல்லியல் துறையினரால் பராமரிக்கப்படும் பிரம்மதேசம் சுமார் ஆயிரம் ஆண்டுகள் முன்பு சிறப்பு பெற்ற ஊராகவும் பல்வேறு சமய, கலாச்சார, சமூக, நிலவியல், நீர்மேலாண்மை தொடர்பான பல்வேறு தகவல் களுடன் எளிமையான அழகான தோற்றத்தில் அமைந்துள்ள ஊராகும். ஊரி லிருந்து தனித்து ரம்மியமாக நிற்கும் இக்கோயில் சோழகள் கால கட்டக் கலைக்கும் தொண்டை நாட்டின் வரலாற்றிற்கும் சிறந்த சான்றாக அமைந் துள்ளது.

### குறிப்புதவி :


1. விக்கிப்பீடியா,
2. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் – திருவண்ணாமலை மாவட்டம் தொகுதி – 1


### புகைப்பட உதவி :


நன்றி : திரு. **சேது,** திருவண்ணாமலை, தண்டராம்பட்டு திரு. **ஸ்ரீதர்,** திரு. **சி. பழனிச்சாமி,** திரு. **மதன்மோகன்,** திரு.**லோகேஷ் குமார்.**

நன்றி : திரு. **பி. வெங்கடேசன்,** தொல்லியல் அறிஞர், திருவண்ணாமலை. திரு. **சுகுமார்,** துணை வட்டாட்சியர். and unknown facebook user... திரு. **வேலுதரன்,** சென்னை.

**நூலாக்க உதவி :** திரு. **முரளி,** முதுநிலை வருவாய் ஆய்வாளர், வெம்பாக்கம்.

நன்றி : ஆவணம் இதழ் 26,

நன்றி : அன்பு வந்தியத்தேவன், நாகப்பட்டினம்.












Printed @ Subam Printers / Tiruvannamlai.